95
மாத இதழ்
ஜனவரி '89
80 காசு.

# சுட்டி




FREE E - BOOKS , www.thamizham.net.,

தென்கிழக்கு ஆசியா :

# புரூணை



திருச்சி மாவட்டத்தின் பாதி அளவே உள்ள இந்த நாடு (5765 ச.கி.மீ) உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாகும். ஆனால்

இங்கு வாழும்மக்கள் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர்களே. கிழக்கு மலேசியாவின் சபா, சராவாக் ஆகிய இரு பகுதிகளுக்கிடையே அமைந்துள்ளது. இசுலாமிய நாடான புரூணை.

இங்குத் தனி நபர் சராசரி ஆண்டு வருவாய் ரூ 3,15,000. வருமானவரியே, இங்கு இல்லை! கல்வி, மருத்துவம் ஆகியவை முற்றிலும் இலவசம். வீடுகட்ட வெறும் 1/2% வட்டிக்குக் கடன் உதவி கிடைக்கிறது.

காலங்காலமாக இருந்துவரும் மன்னரின் முடியாட்சி தான் இன்றும் இங்குத் தொடர்கிறது. மன்னர் பெயர் சர் ஹசனால் போல்கியா. உலகிலேயே முதல் பணக்காரர் இவர் தான். இவர் சொத்தின் மதிப்பு 32 ஆயிரம் கோடி ரூபாய். 5000 அயல்நாட்டுத் தொழிலாளிகளை வைத்து ரூ 450 கோடி செலவில் இவர் தனது மாளிகை எழுப்பியுள்ளார். இதில் உள்ள 1788 அறைகளும் "குளு குளு" வசதி செய்யப்பட்டவை. இதில் கல்தான் தனது 2 மனைவியார் 3 ஆண்மக்கள், 6 பெண்மக்களோடு வசிக்கிறார்.

1920 இல் புரூணையில் பெட்ரோலியம் கண்டு பிடிக்கப்பட்டவுடன் இதன் செல்வம் வானளாவியது. ரப்பர் காடுகள் வேறு வருவாயை ஏற்கனவே வளர்த்திருந்தன. இன்று தேசிய வருவாயில் பாதியை (13 மில்லியன்) இந்நாடு அயல்நாடுகளில் முதலீடு செய்துள்ளது. ஆஸ்திரேலியாவில் புரூணையை விடப் பெரிய நிலப்பரப்பை மன்னர் வாங்கி, தன்நாட்டினரின் மாமிச உணவிற்காக மாபெரும் கால்நடை பண்ணையை அங்கு நடத்தி வருகிறார்.

65% மலாய்காரர்கள். 20% சீனர். சீனருக்கு இங்குக் குடியுரிமை இல்லை எனினும் கடைகள் எல்லாம் சீனர்கள் கையில்தாம். 100 பேர்கள் தங்கக்கூடிய நீண்ட வீடுகளில் இதன் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். தலையை வேட்டையாடும் நாட்களிலிருந்து காப்பாற்றி வரும் மனித மண்டை ஓடுகள் வீட்டில் உத்தரத்தில் இன்றும் தொங்குகின்றன.

தலைநகர் பந்தர் செரிபெகாவான், வெறும் 58,000 மக்கட் தொகையுடையதே. இங்குள்ள பணக்காரர்கள் விலையுயர்ந்த கார்களும், மோட்டார் படகுகளும் வைத்திருந்தும், தூண்களின் மேல் அமைந்த பழைய அமைப்புள்ள கிராமிய வீடுகளில் வாழவே விரும்புகின்றனர். குழந்தைகள் பள்ளி செல்ல, குடும்பப் பெண்கள் கடைகளுக்குச் செல்ல, ஆண்கள் வேலைக்குப் போக, வீட்டை ஒட்டியுள்ள நீர் வழியில் விசை படகுகளில் செல்வதை அங்கங்கே காணலாம்.

1962 இல் முடியாட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து பாராளுமன்றம் அமைக்கத் தேர்தல் நடந்தது. புரூணைமக்கள் கட்சி எல்லா இடங்களையும் கைப்பற்றியது. ஆனால் பாராளுமன்றம் அமைக்க மறுக்கப்பட்டது. இதனால் எழுந்த புரட்சியை, பிரிட்டிஷாரின் கூர்க்கா படை முறியடித்தது. எனவே இன்றும் இங்கு மன்னர் ஆட்சி, வசதியாகத் தொடர்கிறது.

– உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,


# கார்டூன் பதில்கள்



தொலைக் காட்சிக்கும்,


வானொலிக்கும் உள்ள

ஒற்றுமை என்ன?



நன்றி : இந்தியா டுடே

பண்டிதர் நேரு உலக அளவில் புகழ் பெறக் காரணமான செயல் என்ன?




நன்றி:- சங்கர்ஸ் வீக்லி



FREE E - BOOKS , www.thamizham.net.,




தாய்லாந்தில் கரப்பான் விற்கும் நங்கை

வெட்டுக் கிளியும் விட்டில் வகையும், கரப்பான் பூச்சியும் நாம் தொடவே சற்று அருவருப்பான பூச்சி இனங்களாக கருதுகிறோம்.

ஆனால், தாய்லாந்தியர்களிடையே இது மிகச் சிறந்த உணவாக விளங்கி வருகிறது.

குறிப்பாக, வடகிழக்கு மாநிலமான இசானில் வாழும் மக்களுக்கு சிவப்பு வெட்டுக்கிளிகளின் வறுவல் கண்டிப்பாக குழந்தைகளுக்கு வற்புறத்தி ஊட்டப்படும் உணவு வகையாகும்.

நீண்ட காலமாக இப்பகுதி மக்கள். இந்த வெட்டுக்கிளியையும் ஒரு வகைக் கரப்பான் பூச்சியையும் மருந்து உணவாகப் பயன் படுத்தி வருகின்றனர்.

இந்த வகை வெட்டுக்கிளியில் புரதச் சத்த அளவு மிகக் கணிசமாக இருக்கிறது என்றும் மாட்டிறைச்சி போன்றவற்றில் இருக்கின்ற புரதச் சத்தைக் காட்டிலும் இதில் பல மடங்கு கூடுதலாக இருப்பதாகவும் நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

மரவட்டை, கரப்பான் ஆகியவற்றில் புரதச் சத்து நிறைய இருக்கிறத, ஆனால் எல்லாத் தரப்பு மக்களும் உட்கொள்வார்களா என்பதே பிரச்னை. எனவே இந்த மரவட்டை கரப்பானைக் கொண்டு நவீன முறைகளில் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

இவற்றை பவுடராக்கி அதைக் கூட உணவில் கலந்து உண்ண வழி உண்டா எனக் கண்டு பிடிக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இதர சில பூச்சி இனங்களில் உள்ள புரதச் சத்துவின் அளவு வருமாறு:

மூட்டைப் பூச்சி போன்ற தண்ணீரில் வாழும் ஒருவகை பூச்சி இனம் — 75 விழுக்காடு

| | |
|---|---|
| மரவட்டை | 75 விழுக்காடு |
| ஈக்களின் வகை | 76 விழுக்காடு |
| தட்டாம் பூச்சி, விட்டில் | 68 விழுக்காடு |
| பட்டாம் பூச்சி | 71 விழுக்காடு |
| வெட்டுக்கிளி | 72 விழுக்காடு |

FREE E - BOOKS , www.thamizham.net.,

## டிவியைத் தொடர்ந்து பார்ப்பது ஆபத்து!

டிவியைத் தொடர்ந்து மிகுதியாகப் பார்ப்பது மிக ஆபத்தானது என்று அண்மையை அறிவியல் பரிசோதனைகள் நிரூபித்துள்ளன.

**மூளை மழுங்கும்.**

மனித மூளையின் வலப்பகுதி, கனவுகாணல், கற்பனையில் மிதத்தல் ஆகிய பணிகளையும், இடப்பகுதி, பேசல், காரண காரிய செயலில் ஈடுபடல் ஆகிய பணிகளையும் செய்கின்றன. டிவியைப் பார்க்கும் போது இடப்பகுதி வேலை செய்வதில்லை. இட வலப் பகுதிகளுக்கான தொடர்பு துண்டிக்கப்படுகிறது. வலப் பகுதி மட்டுமே அதிகமாகத் தூண்டப்பட்டால் இடப்பகுதி சக்தியிழக்கிறது. இதன் விளைவாக புதியவற்றைப் கற்கும் ஆற்றல், சிறப்பாக மொழி கற்றல் பாதிக்கப்படுகிறது. அறிவுக் கூர்மை மழுங்குகிறது.

**கண்ணில் பாதிப்புகள்:**

திரைப்படம் ஒளியின் நிழல்; டிவி நேரடி ஒளி; அதாவது கண்ணால், நிலவைப் பார்ப்பதற்கும், கதிரவனைப் பார்ப்பதற்கும் உள்ள வேறுபாடு. நேரடி ஒளி டிவியிலிருந்து கண்ணைத் தாக்குகிறது. மேலும் டிவியில் தோன்றும் புள்ளிகள் ஒரு விநாடிக்கு 50 முறைகள் மாறுகின்றன. ஒரு விநாடிக்கு 20 மாற்றங்களையே நம் மூளை பதிவு செய்யும் ஆற்றலுடையது. படத்தை முழுமையாகப் பார்க்க மூளையும் கண்ணும் "ஓவர்டைமில்" ஈடுபட்டு, திணறி சோர்ந்து போகின்றன. இதோடு டிவி படத்தின் தெளிவற்ற தன்மையும் கண்ணைக் கெடுப்பதாகும்.

**பிற கேடுகள்:**

மாறி மாறி வரும் டிவி வெளிச்சம் சிலருக்குக் காக்கை வலிப்பு நோயைத் தூண்டுகிறது. எக்ஸ் கதிர்கள் டிவியிலிருந்து குறைவாக, ஆபத்தற்ற அளவில் வெளிப்படுகின்றன. ஆனால் தொடர்ந்து பார்ப்பது இந்த அளவை மிகுவித்து புற்று நோய் ஆபத்திற்கு அடிகோலலாம். வண்ண டிவியில் வெளிப்படும் சக்திவாய்ந்த காத்தோடு கதிர்கள் தொடர்ந்து பார்க்கப்பட்டால் மேலும் விளைவுகள் தரும்.

**வழி தான் என்ன?**

டிவியை ஒரு சில மணிகள் பார்ப்பது கேடு விளைவித்து விடாது. டிவியோடு தினமும் பல மணி நேரங்கள், அல்லது வீடியோவோடு மணிக்கணக்கில் ஐக்கியமாகிப் போகிறவர்களுக்கு மட்டுமே மேற்கண்ட ஆபத்துகள் உள்ளன. சிகரெட் பெட்டிகளில் குறிப்பிடுவது போல, டிவியிலும் "டிவியை மிக அதிகமாகப் பார்ப்பது உடலுக்குத் தீங்கானது" என்று அறிவிப்பது ஒரு மக்கள் நல அரசின் கடமை"

டிவியை தன் பிரச்சார சாதனமாக்கப் பயன்படுத்தும் சுயநல அரசும், விளம்பர சாதனமாக சேரழித்து வரும் வணிக நிறுவனங்களும், இப்படியொரு அறிவிப்பு வர அனுமதிக்கவே மாட்டார்கள்!

(ஆதாரம்: அலைவ்-1ஜுன்88) - அஞ்ஞானி



FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஒளிப்பதிவு

10 வருடங்களுக்கு முன்னால், 20 வருடங்களுக்கு முன்னால் இருந்த நிலையைவிட இன்றைய ஒளிப்பதிவு மிகவும் முன்னேறியிருப்பது உண்மைதான். ஆனாலும், வெளிநாட்டினரை விட இன்னும் நாம் மிகவும் பின் தங்கியிருப்பதும் உண்மைதானே?

நவீனக் கருவிகள் இன்மையே, நம் தேக்க நிலைக்கு ஒரு முக்கியமான காரணம். ஹாலிவுட்டில் தானியங்கி 'ஸூம்' (Automatic zoom) வசதி உள்ளது. இங்கோ, ஒளிப்பதிவாளரைத் தண்டவாளத்தில் வைத்துத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். படக்கருவிகள் பலவும் இங்கே பழையதாக உள்ளன.

படச்சுருளின் தரமும் வித்தியாசப்படுகிறது. 400 A.S.A. படச்சுருள்தான், இங்கு மிகவும் தரமானதாக உள்ளது, லண்டனில் 1000 A.S.A. தரமுள்ள படச்சுருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. படச்சுருளின் தரம் உயரும் போது, ஒளி நிலையை (lighting) குறைத்துக் கொள்ளலாம். இரவுக் காட்சிகளை 1000 A.S.A. படச்சுருளில், இயற்கையாகப் படம்பிடிக்க முடியும்!

தரமான கருவிகளையும், படச்சுருளையும் வரவழைக்கும் முயற்சி நமக்கு ஏன் இல்லை ? அவையெல்லாம் தேவையில்லை என்னும் மனோபாவம்தான் காரணம். டிஸ்கோ சாந்தியின் காபரே நடனம்தான் இங்கு முக்கியமே தவிர, ஒளிப்பதிவின் தரம் பற்றிக் கவலைப்படும் தயாரிப்பாளர்களும், ரசிகர்களும் மிகக் குறைவு என்பதுதான் காரணம். தொழில் நுட்பத் திறன் பற்றி விமர்சனம் செய்யும் பத்திரிகைகளும், மக்களும் குறைவாகவே உள்ளனர். ஆகவே தரமான ஒளிப்பதிவு அமைந்தாலும், மோசமான காட்சிகளே படமாக்கப்படுகின்றன என்பதும் நிதர்சனம்.

ஆனாலும், எல்லாக் குறைபாடுகளுக்கிடையிலும், தமிழில் தரமான ஒளிப்பதிவு வளர்ந்து கொண்டுள்ளது என்பது உண்மை 'திகில்' நிறைந்த காட்சிகளைத் திரைப்படக்கல்லூரி மாணவர்கள் திறமையாக படம்பிடிக்கின்றனர். ஊமைவிழிகள், செந்தூரப்பூவே முதலான படங்களில் நல்ல ஒளிப்பதிவைக் காணமுடிகிறது. 'அக்னி நட்சத்திரத்தில்', வழக்கத்திற்கு மாறான ஒளிநிலை (Unusual lighting), ஒரு புதுமையாய்ப் புகுத்தப்பட்டுள்ளது. ஒளிப்பதிவுத் துறையில் அது ஒரு புத்திசாலித்தனமான மரபு மீறல் என்று கூறலாம். இதமாய், இனிமையாய், கண்ணை உறுத்தாமல், அழகுணர்ச்சியோடு படம் பிடிப்பதில் பாலுமகேந்திரா வல்லவராய் உள்ளார். .

ஆக, ஒளிப்பதிவுத் துறை முன்னேறுகிறது என்பது உண்மைதான். ஆனாலும், சமூகக் கொடுமைகளை மக்கள் முன் எடுத்துவைக்கும் அரிய ஆயுதமாக 'கேமரா' இன்னும் முழுமையாய் பயன்படுத்தப்படவில்லை.

—வசந்தா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுகதை :

## திருடன்

கேடி கிருஷ்ணனின் குறி, அரசியல் வாதி ' தமிழ்மாறன் வீட்டின் மேல் தான்! பலவருடங்கள் கோட்டை நாற்காலியை விட்டு இணைபிரியாத அரசியல் வாதி, இன்று எதிர்க்கட்சி ஆசாமி. ஆளுகின்ற நாளிலேயே ஊழல் புகார்களுக்கு ஆளாகி, ஆதாரங்களை 'அமுக்கி வைத்து, 'பரிசுத்த ஆத்மா' வாக பிரகடனப்படுத்திக் கொண்டு மக்கள் மத்தியில் 'வெட்கமில்லாமல்' வெளி வருபவர்; நிச்சயம் நிறைய தேரும்; கிருஷ்ணன் கணக்கு தப்பவில்லை...

திட்டமிட்டு திருட்டை முடித்த போது, தங்கம் வைரம் என்று கோடிக்கணக்கில் தேரும் போலிருந்தது. தமிழ் மாறனின் ஆட்கள் தெரியாத்தனமாக போலீசில் புகார் செய்ய, அதுவே அன்றைய செய்தித் தாளிகளில் 'எட்டு கால' தலைப்பாக இடம் பெற்ற சூடான செய்தியானது.

இன்ஸ் பெக்டர் வந்து தலைவர்–தமிழ் மாறனுக்கு ஆறுதல் சொன்னார், 'ஃபிங்கர் பிரிண்ட்ஸை' வச்சுப் பார்க்கும் போது 'இது–கேடி–கிருஷ்ணன் தான், செஞ்சிருப்பான், சீக்கிரம் பிடிச்சுருவோம்' என்று 'ஆறுதல் சொல்லி விட்டும் போனார்.

தமிழ் மாறனுக்கு உதறல் எடுத்தது; அவனைப் பிடித்து திருடின பொருட்களை மீட்டு, இதெல்லாம் உனக்கு எப்படி வந்தது? என்று 'மக்கள் மன்றத்தில் தன்னை உலுக்கி எடுக்க ஆரம்பித்து விட்டால்...

போலீஸை விடத் தீவிரமாக, கிருஷ்ணனைத் தேடியது தமிழ் மாறனின் ஆட்கள் தாம். கண்டுபிடித்து தலைவரின் தடுமாற்றத்தைச் சொல்லிக் குறைந்த அளவே திருடினதாக ஒப்புக் கொண்டால், உனக்கும் நல்லது; எங்களுக்கும் நல்லது என்று சொல்லிவிட்டு சென்றார்கள்.

கேடி கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே தலையாட்டினான்!

–எம்பஷீர்.

ஆசிரியர்: கு. நாராயணபாரதி, வெளியிடுபவர்: கி. இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம்.எஸ்.ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை - 600 005. முகவரி 1494, அண்ணா நகர், சென்னை – 600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டி எழுதியவை எதிரொலிக்கின்றன!

## வாசகர்கள் இருவரின் கடிதங்கள்



"டிசம்பர் இதழில்' குருவி முதுகில் பனங்காய்' என்று பள்ளி செல்லும் மாணவ மாணவியரைப் பற்றிய புகைப்படக் கருத்தைச் சொல்லி இருந்தீர்கள். அதன் தொடர்பாக பஞ்சாப் மாநிலத்தில் ஒரு நூதனப் போராட்டத்தை மாணவர்களே நடத்தி இருக்கிறார்கள்:

சண்டிகாரில் 'முட்டாள்கள் சங்கம்' என்ற ஒரு சங்கம் இருக்கிறது. இந்தச் சங்கம் சார்பில் புத்தகச் சுமையைக் குறைக்கக் கோரி நூதன போராட்டம் ஒன்று நடந்தது. இந்தப் போராட்டத்தையொட்டி அலங்கரிக்கப்பட்ட வண்டியில் புத்தகங்களை அடுக்கி வைத்து மாணவர்கள் இழுத்து வந்தனர். மேலும் சில மாணவ-மாணவிகள் புத்தகங்களை ஒரு பையில் வைத்துத் தங்களது முதுகில் 'பொதி மூட்டையைச் சுமந்து போல' தூக்கி வந்தனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் "நாங்கள் என்ஜினியர்கள், டாக்டர்கள் ஆகாவிட்டாலும் எதிர்காலத்தில் சுமையைத் தூக்கும் கூலிக்காரர்கள் ஆகிவிடுவோம்" "அதிக பாடத்திட்டங்களைத் திணிக்காதே" "அதிக புத்தகங்களைத் தூக்க வைக்கும் ஆசிரியர்கள் நீண்ட காலம் வாழ்க" என்று கோஷம் போட்டனர்.

இந்த ஊர்வலத்தில் 4 வயது நர்சரி குழந்தைகள் முதல் கல்லூரி மாணவ மாணவிகள் வரை ஏராளமான பேர் கலந்து கொண்டார்கள். மாணவர்களின் இந்த நூதன போராட்டத்தைப் பொதுமக்கள் பலர் ரோட்டின் இருபுறமும் நின்று கொண்டு வேடிக்கை பார்த்தனர் - இச்செய்தி 'மாலை மலரில்' வெளியாகி இருக்கிறது.

-நா. கிருஷ்ணவேலு, 19 தாழை வீதி, சோலை நகர், பாண்டிச்சேரி - 605003.

டிசம்பர் 88 சுட்டியிதழில் பன்முக மனிதர்கள் என்ற தலைப்பில் ஏ.எஸ். பிரகாசம் பற்றி கூறியுள்ள கருத்துக்கள் நூற்றுக்கு நூறு உண்மை. நான் கந்தசாமி நாயுடு கல்லூரியில் படிக்கும்போது (1978) இவர் தமிழ் உரை நடை



பிரிவுக்கு வருவார். வருவதே மிகவும் அபூர்வம். அப்படியே வந்தாலும் இரண்டு வரிமட்டும் பாடம் நடத்துவார். மீதியெல்லாம் சினிமாவைப் பற்றியும், சினிமா நடிகைகளைப் பற்றியும் ரீல் விடுவார். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். எந்த சப்ஜெக்ட்டுக்கும் போர் அடிக்கும் என்று கருதி வராத மாணவர்கள், இவர் சப்ஜெக்ட்டுக்கு மட்டும் கண்டிப்பாக வகுப்பில் ஆஜர் ஆகிவிடுவார்கள். காரணம் சினிமா கதை கேட்பதற்காகத்தான்! மற்றும் சினிமா நடிகைகள் பற்றி கிசுகிசு கேட்பதற்காகத் தான்!

-கோ. செல்வன், சிறீ. ஐயப்பா நகர் அஞ்சல், சென்னை-600 111.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## அரசியலைக் கைப்பற்றுகிறது சாதிப்பேய்!

நம் அரசியல் சாசனத்திலேயே சாதிவெறிகளுக்கு விதை இடப்பட்டு விட்டது. நெல்மூட்டையில் கட்டப்பெற்ற எலியைப் போலப் புனிதமான அரசியல் சாசனத்திற்குள்ளேயே மத எலிகளுக்கும், சாதி எலிகளுக்கும் இடம் கொடுக்கப் பெற்றது. இது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்வு. அன்று; வேண்டும் என்றே வற்புறுத்தப் பெற்று நிகழ்ந்தது.

மதச் சார்பற்றது என்று சொல்லப்பட்டதே தவிர, முழுக்க முழுக்க மதச்சார்பையும், சாதிச் சார்பையும் நம் அரசியல் சாசனம் ஏற்றுக் கொண்டு உறுதிப்படுத்தியது.

சுதந்திரம் பெறுகின்ற காலக்கட்டத்தில் இந்தியாவில் கட்டுக்கட்டாக இருந்தவை சாதி நிறுவனங்களும், மத நிறுவனங்களும் ஆகும். அவர்கள் உண்மையில் வாக்கு வங்கிகளாக இருந்தனர். தேர்தல் வெற்றி பெற வேட்பாளர் இவர்களை அணுகுவது கட்டாயத் தேவையாக இருந்தது. இந்நிலையில் அரசியல் கட்சிக்காரன் என்ற ஒருவன் தம் சாதிக்காரனாக இருந்து அதிகாரம் செலுத்துவதை விட, தம் சாதிக்காரனே அரசியல் காரனாக ஆனால் என்ன என்ற உணர்வு அந்தந்தச் சாதியிலுள்ள படித்த மக்களிடையே ஏற்படத் தொடங்கியது.

சாதி மத அடிப்படையில் சலுகைகள் பெறாத, அல்லது மறுக்கப் பெற்ற ஏனைய சாதியினரும் சலுகைகள் அடைவதற்கு ஒன்று திரண்டு விட்டனர். சாதிச் சங்கங்கள் இதனால் வேரூன்றத் தொடங்கின; வலுவடைந்தன; அரசியலைச் சாதி கைப்பற்றியது. பொது வாழ்வில், 'பொதுத் தொண்டு தகுதி' வாழ்விழந்தது. தொடர்ந்து 'கொள்கை அரசியல்' என்பதும் வாழ்விழந்தது. அதனைத் தொடர்ந்து, 'கட்சி அரசியல்' என்பதும் வாழ்விழந்தது. முடிவில் 'சாதி அரசியல்' வாழ்வு பெற்றது.

– க. ப. அறவாணன்

### வேட்பாளர் தேர்வில் சாதிக்கு முன்னுரிமை

சாதிமத வித்தியாசம் பார்ப்பதில்லை என்று— கட்சி கூறிக் கொண்ட போதிலும், தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சி உறுப்பினர்கள், தங்கள் சாதிப் பெயரைத் தெரிவிக்குமாறு—கட்சிக் கமிட்டி அச்சடித்து வழங்கியுள்ள விண்ணப்ப மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

–தினமணி 6.12.1988



FREE E - BOOKS , www.thamizham.net.,

## சத்த எதிர்ப்புச் சங்கம் தொடங்கலாமா?

*பிரியமுள்ள பாண்டியனுக்கு,*

*'பட்டாசுக் கலாச்சாரம்' பற்றி, நீ எழுதியிருந்த கடிதம் கிடைத்தது. என் தோழி கலா (பிந்து கோஷின் அக்கா என்று நீ கேலி செய்யும் அதே கலாதான்) உன் கருத்துக்களை அப்படியே ஆமோதித்தாள். உன்னை மிகவும் பாராட்டினாள். (நீ அவளைக் கேலி செய்வது அவளுக்குத் தெரியாது. பாவம்!)*

*ஆனால், எனக்கு ஒரு கருத்து வேறுபாடு உள்ளது. தீபாவளி என்பது ஐப்பசி-கார்த்திகை மாதத் திருவிழா! கொசுக்களின் அட்டகாசம் அதிகம் உள்ள மாதம். ஆகவே அந்தக் காலத்தில், பட்டாசுப் புகை கொசுக்களை விரட்டும் அன்றைய 'டார்டாய்ஸ்' ஆக இருந்திருக்குமோ என்று தோன்றுகிறது. 'நரகாசுரன்' சமாசாரமெல்லாம் வெறும் 'ரீல்' தான் என்பதில் எனக்குச் சம்மதமே!*


*சத்தம் உன்னை அதிகம் சங்கடப் படுத்துவதாய் எழுதியிருந்தாய்; எல்லோரையும் தான்! இதோ எங்கள் வீட்டின் எதிர்மாடியில் ஒரு ஐயப்ப பக்தர்! 'சாமியே சரணம் ஐயப்பா' - பாட்டும், சத்தமுமாய், இந்த மாதம் முழுவதும் என்னால் எதையும் படிக்கவோ, எழுதவோ முடியவில்லை. பக்தி என்பது அவருடைய தனிப்பட்ட விஷயம். அதில் நான் தலையிட முடியாது. ஆனால், அவரது பக்தியை, 'லவுட் ஸ்பீக்கர்' வைத்து என் காதுகளுக்குள் 'திணிப்பது' எந்த வகையில் நியாயம்? அவரை மட்டுமல்ல. பெந்த கோஸ்தே, சாய்பாபா - இப்படி எல்லா மதத்தினரையும் கேட்கிறேன் - பக்தி என்ன விளம்பரப் பொருளா? ஏன் இப்படிச் சத்தம் போட்டு எங்கள் காது ஜவ்வைக் கிழிக்கிறீர்கள்?*

*" உனக்கேன் ஊர் வம்பு?" என்று அம்மா என்னைத் திட்டுகிறாள். `சரி, திட்டாதே. எனக்கும் ஒரு `லவுட் ஸ்பீக்கர்' வாங்கிக் கொடு. போதும்' என்று சொல்லியிருக்கிறேன்.*

*விளையாட்டில்லை. உண்மையாகவே "சத்த எதிர்ப்புச் சங்கம்" தொடங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.*

*உன் தோழி*
*ரேவதி.*

FREE E - BOOKS , www.thamizham.net.,



# விபத்து நடக்கும் இடங்கள்

சென்னையில் இருப்பவர்களுக்கும், சென்னைக்கு வருபவர்களுக்கும் ஓர் எச்சரிக்கை! நாளும் சென்னையில் விபத்துகள் அதிகரித்து வருகின்றன. எனவே உயிர் காப்புச்சங்கமும், சென்னை போக்குவரத்து காவல்துறையினரும் இணைந்து கீழ்க்கண்ட இடங்களை அடிக்கடி விபத்து நடப்பதற்குரிய இடங்கள் என்று அறிவித்து எச்சரிக்கை செய்துள்ளனர்.

**தென் சென்னை:**

*காமராஜர் சாலை (எழிலகம் அருகே)*
*அசோக் தூண் சாலை (அசோக் தூண் அருகே)*
*எஸ்.வி. பட்டேல் சாலை (காந்தி நகர்)*
*என். எஸ்.கே.சாலை (கோடம்பாக்கம், டிரஸ்ட்புரம் அருகே)*
*அண்ணா சாலை: இந்தியா சில்க் அவுஸ் அருகே, டி.வி.எஸ் அருகே, எல்டாம்ஸ் சாலை நாற்சந்தி, ஏரிக்கரை அருகே*
*நந்தனம் சிக்னல், சைதை ஆசிரியர். கல்லூரி அருகே, கிண்டி சுரங்கப்பாலம் அருகே, சின்னமலை போக்குவரத்து சந்திப்பு-ஹால்டா போக்குவரத்து சந்திப்பு*

**வட சென்னை :**

*ராஜாஜி சாலை (ரிசர்வ் வங்கி சுரங்கப் பாலம் அருகே)*
*ராஜாஜி சாலை (துறைமுகம் முக்கிய கதவு அருகே)*
*எஸ்.என். செட்டி தெரு (குப்பம் சாலை நாற்சந்தி-ராயபுரம்)*
*ஈ.வே.ரா சாலை (அரசு பொது மருத்துவமனை அருகே)*
*ஈ.வே.ரா சாலை (புகாரி ஓட்டல் அருகே)*
*வால்டக்ஸ் சாலை (யானை கவுனி காவல் நிலையம் அருகே)*
*எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை (அம்பேத்கார் கல்லூரி அருகே)*
*பழைய சிறைச் சாலை ரோடு (ஸ்டான்லி மருத்துவ மனை முக்கிய வாசல் அருகே)*
*திருவொற்றியூர் நெடுஞ்சாலை (அகஸ்தியா திரையரங்கு அருகே)*
*பேசின் பிரிட்ஜ் சாலை (கரீம் பீடி தொழிற்சாலை அருகே)*
*அரும்பாக்கம் (போக்குவரத்து பணிமனை அருகே)*

*விபத்துகள் நடந்தால், பல மருத்துவமனைகள் கைவிரிக்கும்; ஆனால் கீழ்க்கண்ட மருத்துவமனைகள் சிகிச்சை செய்ய முன் வருகின்றன. தொலை பேசலாம் அப்பல்லோ மருத்துவமனை - 474343, ஆயிஷா மருத்துவமனை 666930, அஸ்வினி மருத்துவமனை 454525, பாலாஜி மருத்துவமனை 433863, நேஷனல் மருத்துவமனை 511408, பிரியா நர்சிங் ஹோம் 551878, விஜயா மருத்துவமனை - 422066*

*– சித்தன்*



FREE E - BOOKS , www.thamizham.net.,

# தமிழில் உலகக் கவிதைகள்

மலையில்
புலிகளைச் சந்தித்தேன்
காயமின்றித் தப்பித்தேன்
சமவெளிகளில்
மனிதரைச் சந்தித்தேன்
சிறையில் கிடக்கிறேன்.
-ஹோசிமின்
வியட்நாம்

உழுபவன்
பசி தீர்க்காத வயலில்
ஒரு தானிய மணி கூட
இல்லாமல்
நெருப்பில் பொசுக்குங்கள்!
-இக்பால்
பாகிஸ்தான்

ரொட்டியின் விலை
குறைய வேண்டும்
மனிதனின் விலை
உயர வேண்டும்.
-ரசூல் தம்ஸ தோவ்
சோவியத்

எங்கள் நாட்டிற்குப்
பாதிரிமார்கள் வந்தபோது
அவர்கள் கைகளில் பைபிள்
இருந்தது
எங்கள் கைகளில் நிலம் இருந்தது
இன்று
எங்கள் கைகளில் பைபிள்
இருக்கிறது
அவர்கள் கைகளில் நிலம்
இருக்கிறது.
-செங்கோர்
ஆப்பிரிகா.

குண்டுகள் துளைத்த
ஒவ்வொரு துளையிலிருந்தும்
ஸ்பெயின் எழுதுகிறது—
செத்து மடிந்த—ஒவ்வொரு
சின்னக் குழந்தையிலிருந்தும்
கண்களோடு
துப்பாக்கி பிறக்கிறது.
-பாப்லோ நெருடா.
சிலி.

ஈரோடு தமிழன்பனின்,
'சிகரங்கள் மேல் விரியும்
சிறகுகள்' நூலிலிருந்து

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிரிவு

# 'பெரியார் செய்ததும் செய்யத் தவறியதும்'



(அ. அறிவொளி, எம்.ஏ., - அன்பரசி வெளியீட்டகம், வடக்குத்தெரு, பொருள்வை, சிக்கல் - 611 108 - மே 1979 134 பக் - ரூ 5/-)

- பெரியார் காங்கிரசை விட்டு வந்தது வரலாற்றில் வீழ்ந்த வடு என்றே கருத வேண்டும். அங்கேயே இருந்திருந்தால், தென்னகத்தின் குரலில் உரம் கூடியிருக்கும்—தென்னாடு மொழியாலும், வளத்தாலும், வாரிசுப் பிரச்சினைகளாலும், இரண்டாம் நிலைக்கு வந்திருக்காது—தென்னாட்டான் ஒருவன் பிரதமராகவே ஆகியிருப்பான்.

- பொதுவுடைமையைப் பரப்ப நீ நினைந்து முயன்றால், சமத்துவச் சகோதரத்துவத் தீயில், மதமாச்சரியங்களும் மூடத்தனங்களும் பொசுங்கி விடும். பொதுவுடைமையை அரசாங்கமாக மாற்றி, மத நம்பிக்கைகளை அழிப்பதை விட்டுவிட்டு, அதனுடன் நேரிடையாகப் போரிட்டால் சக்தி விரயமாகும். ஆகையால், மதத்தையும், கடவுளையும் எதிர்ப்பதில் பெரியார் சிறிது குறைந்த சிரத்தை கொண்டிருக்க வேண்டும்.

- மதங்களைப் பெரியார் வீழ்த்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியின் அளவு, பொருளாதாரச் சமத்துவத்துக்கு எடுத்திருந்தால், அவர் நிறைவாக இறுதிக்காலத்தில் வாழ்ந்திருப்பார்.

- மதத்தை அழிப்பதென்று முடிவு செய்திருந்தால், இந்தியா முழுதுமல்லவா பிரச்சாரத்தைப் பரப்பியிருக்க வேண்டும்? சாதி, சடங்கு, அடிமை ஆகியவை இந்தியாவை நோக்கிய பிரச்சனை தவிர, தமிழகத்துக்கு மட்டும்தானா ? முன்னேறுவது குறையல்ல! பிறரின் வாய்ப்பை மறைப்பது தவறு! இதற்காக 97 சதவிகித மக்களுக்காகப் பெரியார் கொடுத்த குரலை யாரும் சந்தேகிக்கக் கூடாது. அது ஓர்

- அமரகீதமே!

- பிரச்சாரமே தேவை, ஆட்சி தேவையில்லை என்று அவர் முடிவு செய்திருந்தால், அதை நாம் எப்படி வரவேற்பது? பெரியார் ஆட்சியைப் பிடித்துத்தான் இருக்க வேண்டும். 15 ஆண்டுப் பிரச்சாரத்துக்குப் பின், இவர் ஆட்சியில் சென்று கொள்கைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்திருந்தால் 50 ஆண்டுகளில், அவர் எதிர்பாராத முன்னேற்றம் வந்திருக்கும்.

- நம்மிடையே ஒரு காரல் மார்க்ஸ் பிறந்திருந்தார். அவர் பிரச்சினைகளின் ஆணிவேரை நோக்காமையால், ஈ.வெ.ரா என்ற பெயருடன் மட்டும் மறைந்துவிட்டார்.



FREE E - BOOKS ; www.thamizham.net.,

# தேர்தல் வருமா?

*(தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 13-12-88 அன்று இரவு எழுதப்பட்டது).*

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்ட பிறகும் கூட 'தேர்தல் உண்மையாவே வருமா? என்ற சந்தேகம் இன்னும் நீங்கிவிடவில்லை.

ஓராண்டாக மங்கிக் கிடந்த வன்னியர் பிரச்சினை திடீரென்று மேலே வந்திருக்கிறது. சென்ற வருடம் செப்டம்பர் மாதத்திலேயே வன்னியர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போதே கமிஷன் அமைத்திருந்தால் இந்நேரம் தீர்வு ஏற்பட்டிருக்கும். அதை விட்டு விட்டு, தேர்தல் அறிவிப்பையும், வன்னியர்களிடம் கோபத்தைக் கிளறியிருக்கும் தீர்வையும் ஒரே நேரத்தில் அறிவித்திருப்பது சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

பொதுவாக நம் இந்திய ஜனநாயகம் எதிர் அணியினர் போராட்டங்களுக்குத் தொலைக்காட்சியிலோ, வானொலியிலோ முக்கியத்துவம் தரச் சம்மதிக்காது. அது மட்டுமல்லாமல், பத்திரிகைகள் அந்தச் செய்திகளை வெளியிட்டால் கூட அரசாங்கம் அச்சுறுத்தும். ஈழம் தொடர்பாக நடைபெற்ற பல போராட்டங்களையெல்லாம், நம் தொலைக்காட்சிகள் தம் 'திருவாயால்' வெளியிட்டதே இல்லை. ஆனால், வன்னியர் போராட்டத்தைப் பற்றி, ஒரே நாளில் பலமுறை வானொலியும், தொலைக்காட்சியும் கூறின. இதுவும் நம் சந்தேகத்தை வலுவடையச் செய்கிறது.

ஜெயலலிதா, ஜானகி இருவர் அணியோடும் கூட்டணி ஏற்படாத நிலையில், வன்னியர் கலவரத்தைக் காரணம் காட்டி, தேர்தலை ரத்து செய்துவிட்டு, மீண்டும் ஆளுநர் ஆட்சியை நீட்டிக்கவோ, அவசரநிலையை அமுல்படுத்தவோ, காங்கிரஸ் கட்சி முயற்சி செய்யக் கூடும்? கலவரம் ஏற்படும் என்பதை எதிர்பார்த்தே, கடந்த மூன்று மாதங்களாக, வன்னியர்களுக்குப் பெரிய எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் ஏற்படுத்திவிட்டுக் கடைசி நேரத்தில் காலை வாரியிருக்கலாம்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகாவது உண்மை வெளிவந்தே தீரும். ஆனால், அதற்குள் ஏற்படப் போகிற சாதிக்கலவரங் களுக்கும், பலியாகப் போகிற பல்லாயிரம் உயிர்களுக்கும் யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்?

*-பாமரன்.*

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பணநாயகத் தேர்தல்

தங்கள் சொந்தக் காசில் தேநீர் குடித்துவிட்டு, தேர்தல் சுவரொட்டி ஒட்டும் கைகள், தேர்தலுக்குப் பிறகு தங்கள் கட்சி மந்திரியின் வீட்டுக் கதவைத் தட்டி விட முடியாது! ஓடி ஓடிப் பிரச்சாரம் செய்த தொண்டர்களின் கால்கள், பிறகு மந்திரிகளின் மாளிகைகளுக்குள் கால் வைத்து விட முடியாது! ஆனால், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், யார் முதலமைச்சராக வந்தாலும், நம் நாட்டின் தொழில் அதிபர்களும், சாராய வியாபாரிகளும், தொலை பேசியிலேயே எல்லா மந்திரிகளோடும் பேசிக் காரியம் சாதித்துக் கொள்ள முடியும். ஆக எந்தக் கட்சி வென்றாலும், அது நம் தேச முதலாளிகளின் வெற்றிதான்!

ஏன் இப்படி?

நம் நாட்டில் உண்மையான ஜனநாயகம் இல்லை என்பதாலும், பண நாயகமே தேர்தல் வெற்றிகளை நிர்ணயிக்கிறது என்பதாலும்தான் நிலைமை அப்படி! அண்மையில் ஒரு பெரிய கட்சியின் ஊழியர் கூட்டத்தில், ஒவ்வொரு வேட்பாளரும் குறைந்தது ஆறு, ஏழு லட்சம் ரூபாய் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், மேலும் 5 லட்சம் அளவிற்கு கட்சி உதவும் என்றும் கூறப்பட்டதாம். (ஒரு ஓட்டுக்கு 25 ரூபாய் வீதம், 25,000 ஓட்டுக்களுக்கு ரூ 6,25,000 கண்டிப்பாகத் தேவை என்றும் பேசப் பட்டுள்ளது), மற்ற கட்சிகளும் சளைக்கப் போவதில்லை. இப்படிக் கோடிக் கணக்கில் புரளும் பணம் தான் வெற்றியை முடிவு செய்யுமெனில், எல்லாக் கட்சிகளும் முதலில் போட்ட 'முதலீட்டை' பிறகு சம்பாதிக்கத்தானே முயற்சி செய்வார்கள். ஆகவேதான், கட்சித் தொண்டர்கள் தலைவர்களிடம் காட்டும் 'பாசம்', மரியாதை இழக்கிறது. கட்சித் தலைவர்கள், பணக்காரர்களிடம் காட்டும் 'விசுவாசம்' அர்த்தம் பெறுகிறது.

- பொது ஜனன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## அணைக்கட்டுகள் ஏன் தீங்கானவை?

அமெரிக்காவில் 1936 இல் கட்டப்பட்ட ஹீவர் அணைக்கட்டுதான் புதிய இந்தியாவில் பக்ரா அணைக்கட்டு போன்ற மாபெரும் அணைகள் கட்டத் தூண்டு கோலானது. 1956 இல் பக்ரா அணைக்கட்டின் திறப்பின் போது பிரதமர் நேரு "நான் வழிபடும் இந்தியாவின் புதிய கோவில்கள் இவைதான்" என்றார்.

இந்த அணைக்கட்டு முற்றுப் பெற்றவுடன் ராஜஸ்தான் பாலைவனங்களெல்லாம் பச்சைப் பசேலெனச் சோலைவனமாகி உயிர் பெறும், என்றும் கூறப்பட்டது. ஈராண்டுக்குப் பிறகு, நம்பிக்கைகள் பொய்யாகி விட்டவுடன் அதே நேரு இந்த அணைக்கட்டுகளை "பூதாகரத்தின் வியாதி" என்று விமர்சித்தார்.

இந்தியாவின் 1554 பெரிய அணைக்கட்டுகள் 1951 முதல் 1985 வரை விழுங்கி ஏப்பமிட்ட தொகை ரூ 152லட்சம் கோடி! இதனால் பெரிய மாற்றம் ஒன்றும் நிகழவேயில்லை. இலக்கை விடக் குறைவான மின்சாரமும், கொஞ்சம் பாசன வசதியும் தாம் கண்ட பலன். இதனால் மிகுதியாகப் பயனடைந்தவர்கள் கண்டிராக்டர்களே.

பயன் குறைவாக இருப்பதோடு, ஈடு செய்ய முடியா இழப்புகளும் அணைகளால் ஏற்பட்டுள்ளன. சுமார் 2 கோடி காடு வாழ் பழங்குடிகள் அப்புறப்படுத்தப்பட்டு அநாதையாக்கப்பட்டுள்ளனர். இயற்கையோடு, காலங் காலமாக ஒன்றி வாழ்ந்த இம்மக்களைப் பிடுங்கியெறிந்தது அவர்களைச் சகடிப்பது மாதிரி என்று மானிட இயல் நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். இப்படி அப்புறப்படுத்தப்பட்ட அப்பாவி மக்களுக்கு இன்னும் சரியான, நிரந்தர குடியிருப்பு வசதி கூடச் செய்து தரப்படவில்லை.

தேக்கி வைக்கப்படும் அணைக்கட்டு நீர் பல்வகை நோய்க்கிருமிகள் தோன்றி வளரும் பண்ணையாகி, நோய்களைப் பரப்புகிறது. பாசன நிலங்கள் சில சதுப்பு நிலங்களாக்கப்பட்டு, பயிர்த்தொழில் செய்ய முடியாததாகி விடுகிறது. காலங்காலமாக வற்றாமல் ஓடிய தென், வட இந்திய நதிகள் பலவற்றை இந்த நூற்றாண்டில் ஒட்டச் சுரண்டி மணல் தக்க வைத்துள்ளன அணைகள். மேலும் தண்ணீரைத் தரக் காரணமான இயற்கை சூழலை நாசம் செய்தே அணைகள் கட்டப்படுகின்றன.

சென்ற ஆண்டு டில்லியில் கூடிய ஆசிய பசிபிக் அரசு அல்லா 48 நிறுவனங்களின் அறிக்கை உலகெங்கும் பெரிய அணைக்கட்டுகள் தோல்வியுற்றுவிட்டன. வாக்குறிதிகள் நிறைவேற்றப்படுவதற்குப் பதில் சமூக சூழலியல் கேடுகளையே ஏற்படுத்தியுள்ளன என்று தெளிவுபடுத்தியுள்ளது.

-ஸ்டெனிஸ்லாஸ்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# என் கணவர் சத்யஜித்ரே



**உலகப்புகழ் திரைப்பட இயக்குநரும், இந்தியாவின் மிகப்பெரிய அறிவு ஜீவிகளில் ஒருவருமான சத்யஜித்ரேயுடன் 40 ஆண்டுகாலமாக வாழ்ந்து வரும் அவர் அருமை மனைவி பிஜோயா ரே இங்கு மனம் விட்டு பேசுகிறார்:**

என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு மேதை என்று சொல்லமாட்டேன். உலகின் பார்வையில் அவர் மேதையாக இருந்தாலும் எனக்கு அவர் கணவர் மட்டுமே. இதயப் பூர்வமாக அவர் மிக எளிய மனிதராக இருப்பதால் நான் மிகச் சாதாரண பெண்ணான நான் அவருடன் சிரமமின்றி வாழ முடிகிறது

மானிக்- இது அவரை நாங்கள் அழைக்கும் பெயர் - உதவியாளர் யாரையும் வைத்துக் கொள்வதில்லை. அவர் வேலைகளை அவரே தான் செய்வார். கடிதங்களுக்குப் பதில் போடல், தொலைபேசியை எடுத்தல், வீட்டு முன் கதவைத் திறத்தல் போன்றவற்றைக் கூட அவரே தான் செய்வார். அவர் தேவைகள் குறைவு. தூய்மையான குர்தா-பைஜாமா, எளிய உணவு.

கடந்த நீண்ட 5 ஆண்டுகள் வேதனையானவை. அவரால் மிகவும் விரும்பப்படுகின்ற, படமெடுக்கும் பணியிலிருந்து அவர் வலுக்கட்டாயமாக நீங்கியிருக்க வேண்டிய நிலை. 1983 இல் அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு இதற்குக் காரணம். இந்தக் காலத்தை 'சந்தோஷ்' என்ற அவரது குழந்தைகள் இதழுக்கு ஓவியம் தீட்டுவதிலும், கதை எழுதுவதிலும் செலவிட்டார்.

டிசம்பரில் எடுக்கத் தொடங்கியுள்ள 'கணசத்ரு' படத்தை முழுவதும் உட்புற படப்பிடிப்பாகவே அமைத்துள்ளார்– வெளிப்புற அலைச்சல் அவர் உடல் நிலைக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதால், படமெடுக்க முடியாதநிலை ஏற்பட்டால், மிகவும் துன்பமடைவேன் என்று வருந்திக் கூறுகிறார்.

கணவரும் மகன் சந்தீப்பும் படத்தைப்பற்றி விவாதிக்கும் தருணங்களை நான் ரசிப்பேன். சந்தீப் உண்மையில் ஓர் அற்புதமான மகன். தலைமுறை இடைவெளி என்ற வார்த்தைக்கே எங்களிடம் பொருளில்லை. என் கணவரின் கண்மணி அவன்தான். அவன் வெளியூர் சென்றால், தொலைபேசி அருகில் அமர்ந்து கொண்டு, அவன் கூட பேச முயன்று கொண்டிருப்பார். தினமும் அவனிடம் அவர் பேசியாக வேண்டும்.

தயாரிப்பாளர்களின் பின்பலம் அவருக்குக் கிடையாது. எனவே என் நகைகளை ஒரு முறை அல்ல, பலமுறை அடகு வைத்திருக்கிறேன். இன்று எனக்கு ஓர் அங்குல நிலம் கூடச் சொந்தமாக இல்லை. எனினும் யாருடனும் மாற்றிக் கொள்ள விரும்பாத, ஏன் இங்கிலாந்து அரசியுடன் கூட மாற்றிக் கொள்ள விரும்பாத நிறைவான வளமான வாழ்க்கை என்னுடையது.

- இக.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது எளிய மருத்துவம்-6

*(மத்திய அரசின் ஆயுர் வேத சித்த மைய ஆராய்ச்சிக் கழகத்தின் அதிகாரப்பூர்வமான குறிப்புகள் இவை)*

**நீரிழிவு:** (Diabetes)

**அறிகுறிகள்:** அடிக்கடி அதிக அளவில் நீர்போதல், உடல் இளைத்தல், களைப்பு, அதிக பசி, அதிக நீர் வேட்கை, சிறுநீரில் இனிப்பு.

**மருந்து:** ஆவாரை இலை, பூ, காய், பட்டை, வேர் வகைக்கு 4 கிராம் எடுத்து நீர் 400 மி.லிட்டர் சேர்த்து கால் பாகமாகச் சுண்டும்படி காய்ச்சி வடிகட்டவும். இதனை 30-60 மி. லிட்டர் தினம் இரு வேளை பருகுக. ஆண்குறி எரிச்சலைத் தணிக்கவும் இது உதவும்.

**சொறி சிரங்கு** (SCABIES)

**மருந்து:** பொரித்த வெங்காரத்தைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து மேற்பூச்சாக உபயோகிக்கவும். தவளைச் சொறிக்கும் (PHRYNODERMA) இதுவே மருந்து.

**தேள்கடி**

**மருந்து:** 1. கொட்டிய இடத்தில் உப்பை நீரில் அரைத்துப் பற்றிடவும்
2. அரிந்த வெங்காயத்தைச் சுண்ணாம்புடன் கொட்டிய வாயில் தேய்க்கவும்

**காணாக்கடி** (INSECT BITE)

**அறிகுறிகள்:** ஏதேனும் ஒரு பூச்சி கடித்து, கடிவாயில் நமைச்சலும் வீக்கமும் உண்டாதல்.

**மருந்து:** 1. குப்பைமேனி இலையுடன் உப்பு சேர்த்து அரைத்துப் பூசவும்
2. தாளித்த சுண்ணாம்பைக் கடிவாயில் தடவவும்.

**அதிதூல ரோகம்** (அளவுக்கு மீறிய ஊளைச்சதை)(OBESITY)

**அறிகுறிகள்:** உடல் அளவுக்கு மீறி பருத்தல், உடல் ஆயாசம், நடக்கும் போது மூச்சு வாங்குதல், சோர்வு

**மருந்து:** 1. முள் முருங்கை இலையினைச் சாறு பிழிந்து 3 தேக்கரண்டி காலையில் பருகவும்.
2. எலுமிச்சம் பழச்சாற்றுடன் தேன் கலந்து காலையில் அருந்தவும்

*தொகுப்பு - சித்தன்.*

FREE E - BOOKS , www.thamizham.net.,

விலங்குகள் – அவை
வியர்வை சிந்தி
உழைத்து விட்டுக்
கோழைத்தனமாகக்
கோரிக்கை வைப்பதில்லை

கண்மூடாது இருவில்கிடந்து
தமது பாவங்களுக்காகப்
புலம்புவதில்லை
அதிருப்தியில்லை;


அகப்பட்டதைச் சுருட்டப்
பித்துப் பிடித்து
அலைவது இல்லை

ஒன்று மற்றொன்றிடம்
மண்டியிடுவதில்லை
வாழ்ந்து முடிந்த
முன்னோருக்கும்
மண்டியிடுவதில்லை.

– வால்ட் விட்மன்.









FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

வெள்ளை பீடியுடன் நம் "வருங்கால முதல்வர்!" மூப்பனாரைப் போட்டு, வம்பை விலைக்கு வாங்கி விட்டீர். அப்படி முதல்வர் ஆனால் தொலைந்தீர்! சுட்டிக்கு இருந்தாலும் குறும்புத்தனம் அதிகம்தான்.

-வீர.அருள்நாதன், பொதுக்குடி.

ஒருநாள் தீபாவளிக்குப் பட்டாசு வெடிப்பவர்கள் ஆதிவாசிகள் என்றால், நாள் முழுவதும் ஆலைகள், பஸ், லாரி ரயில் இத்யாதி.. சத்தங்களில் மட்டும் சங்கீதமா மறைந்து கிடக்கிறது. பட்டாசுத் திரியில் நெருப்புப் படுவதால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வறுமைப்பசி எரிந்து சாம்பலாகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

-பொன். ராஜேந்திரன், முருங்கப்பேட்டை.

மத்தாப்பின் ஒளிதான் மனமகிழ்ச்சியையும் இனிய உணர்வையும் ஏற்படுத்துகிறதேயொழிய பட்டாசின் ஒலி அல்ல. அறியாப் பருவத்தில் நானும் மிகப் பெரிய வெடியெல்லாம் வெடித்துள்ளேன். இப்போது உணர்கிறேன் ஏன் இப்படியெல்லாம் செய்துவிட்டேனோ என்று.

-பாளை. அசோக, 284 புத்தில்லம்,
புனித வளவனார் கல்லூரி, திருச்சி-620002.

சுட்டி 94 வது இதழில் மூன்றாம் பக்கம் வெளிவந்த படக் கருத்து பாலகர்கள் பயமுறுத்தலால் சுமை தூக்குபவர்களாக மாறிய விதத்தைக் கோடிட்டுக் காட்டி, நர்சரி பள்ளி வியாபாரம் செய்வோருக்குச் சரியான நெத்தி அடி கொடுத்து விட்டீர்கள்.

-இரா. காமராக, மேலவாசல், 614012.

முதல் காரணம் நாடகம் இன்றைய வியாபாரம், அரசியல் யதார்த்தங்களை நன்றாகப் பிரதிபலித்தது.

-கபாலு, மேலக் கொண்டையம் பேட்டை
-620005.

சினிமா எவ்வளவோ முன்னேறிவிட்டது; நடிகனோ, நடிகையோ ஏற்றுக் கொண்ட கதாபாத்திரம் போல வாழ்ந்து காட்டாமல் நடிக்க ஆரம்பித்தாலே 'ஓவர் ஆக்டிங்' என்று பரிகசிக்கிறோம். இது நல்ல முன்னேற்றம் தான். இன்னொரு புறம் சண்டைக் காட்சி என்ற பெயரில் ' காதுலபூ'. இதை இன்னும் காரமாகவே விமரிசித்திருக்கலாம்.

-எம்.பஷீர், ஐதராபாத்.

## சுட்டி முன் இதழ்கள்

இதழ் எண் 72 முதல் முன் இதழ்களைப் பெற, இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால், உடனே அஞ்சலில் வந்து சேரும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ரத்த வியாபாரிகள்

இங்கே எல்லாப் பொருளும் விலைக்குக் கிடைக்கும் - ரத்தம் உட்பட! மனித ரத்தத்தைக் கூட மொத்தமாகவும், சில்லறையாகவும்' இங்கே சில நிறுவனங்கள் விற்றுக் கொண்டுள்ளன.

சாதாரணமாக அரிமா சங்க (Lions Club) ரத்த வங்கி உட்பட, எங்கும் 350 c.c உள்ள ஒரு யூனிட் ரத்தத்தின் விலை 125 ரூபாய். அரிய 'குரூப்' ரத்தமாக இருந்தால், விலை அதிகமாகிக் கொண்டே போகும். ஒரு யூனிட் ரத்தத்தின் விலை ரூ.750 வரை செல்வதுண்டு. கேட்டால், அது 'சர்வீஸ் சார்ஜ்' என்று கூறுகின்றனர். மிகுந்த குளுமையான சூழலில், அதாவது -120°C நிலையில் ரத்தத்தைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் சென்னையில் எந்த ரத்த வங்கியும், அவ்வளவு குறைவான சிதோஷ்ண நிலையைக் கொண்டிருக்கவில்லை. அப்பல்லோ மருத்துவமனை ரத்த வங்கியின் சிதோஷ்ண நிலை -70°C தான்! மற்ற வங்கிகளின் நிலை இதை விட மோசம்.

ஒரு நாளைக்கு 400 முதல் 500 யூனிட் ரத்தம் சென்னைக்கு மட்டும் தேவைப்படுகிறது. ஆகவே, அரசு மருத்துவமனைகள், தனியார் ரத்த வங்கிகளைத்தான் நம்பியிருக்க வேண்டியுள்ளது. அரசு வங்கிகளில் உள்ள ரத்தம் முழுவதும் ஏற்கனவே ரத்த சோகையால் பாதிக்கப்பட்ட மக்கள், பணத்துக்காக கொடுத்த ரத்தம். ஆனால், தனியார் வங்கிகளோ, கல்லூரி மாணவர்களிடமிருந்தும் சமூகத் தொண்டு நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்தும், ஆரோக்கியமான ரத்தத்தை இலவசமாகப் பெற்று அரசாங்கத்திற்கு விற்பனை செய்கின்றன.

இந்த ரத்த வியாபாரத்தை வெளிநாடுகளைப் பின்பற்றி ஒழித்துவிடலாம். அங்கே ஒவ்வொருவருக்கும் தனித்தனி 'பாஸ்' புத்தகம் உள்ளது. ரத்த வங்கியில் ஒரு கணக்கைத் தொடங்கி நம் ரத்தத்தைக் கொடுத்து, நம் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளலாம். எப்போது நமக்கு ரத்தம் தேவையோ, நம் கணக்கிலிருந்தே, நம் ரத்தத்தையே நாம் எடுத்துக் கொள்ளலாம். இப்படி ஒவ்வொருவரும் கணக்குத் தொடங்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கி விட்டால், ரத்த வங்கிகளின் 'கருணை மிகுந்த தொண்டு' நமக்குத் தேவைப்படாது அல்லவா?

-பழநி-



FREE E - BOOKS , www.thamizham.net.,

இரண்டாம் பரிசு பெறும் நாடகம்

# கனவும் கண்டு மற!

**தங்கவயல் கி. சீனிவாசன்**

இடம்: முன்னேற வேண்டிய கிராமத்தின் முன்னுக்கு வரமுடியாத ஒரு சாதாரன ஓட்டு வீடு.

அங்கத்தினர்: பாட்டி, நாராயணன், அம்மா, தாத்தா, தந்தை.

பாட்டி: எலேய்... நாராயணா..எம்புட்டு நேரம் படிச்சிகினே இருப்ப. சுருக்க எழுந்து போயி அப்பன் வரானா பாரு தொர.. பாவிமவன் அந்த கந்தாயக்கார புண்ணியவான் வேற நேத்தே வந்து, இன்னிக்கு கட்டலேன்னா கதவுவாசக்கால கழட்டிப்புடுவேன்னு கத்தனான். உன் அப்பன் மட்டும் என்னா செய்வான் பாவம்...

நாராயணன்: நீ சும்மாயிரு பாட்டி, நான் நல்லா படிச்சி ரெவின்யூ ஆபீசரா வந்து ஏழைங்களுக்குக் கந்தாயமே இல்லாம பண்ணறேன்.

அம்மா: (உள்ளிருந்து இருமியபடியே) நாராயணா... அப்ப்ன் வருதா பாரு கண்ணு...தர்ம ஆஸ்பத்திரி மருந்து ஒன்னும் சொகமில்ல., நம்ம தங்கராசு வைத்தியர் கிட்டயாச்சும் நாட்டு மருந்து வாங்கியார சொன்னேன். இன்னும் காணலியே...?

நாரா: (வெளியே பார்த்துவிட்டு) வரலம்மா..நீ நல்லா புடவைய போத்திகிட்டு படுத்துக்க, நல்லாயிடும். நான்..நல்லா படிச்சி டாக்டராயி, ஏழைங்களுக்கெல்லாம் ஓசி மருந்து தாரேன்.

தாத்தா: ஏன்டா நாராயணா..கோடிவீட்டு குப்புசாமி சம்சாரம், மவன பள்ளிக்கூடம் சேர்க்கனும்னு பர்து சாடிபட் வாங்கியார சொன்னாளே ...போவல?

நாரா: போயிருந்தேன் தாத்தா. பர்த் சர்டிபிகேட் வாங்கறதுக்கு அஞ்சு ரூபா கட்டணுமாம். அந்த அக்காகிட்ட கேட்டதுக்கு அஞ்சு பைசா ஏதுடா நாராயணா... போவட்டும் உடு, பொட்ட கழுத படிச்சி என்னா பண்ணப்போவுது, பள்ளிக்கூடம் சேர்க்க வாணாம்னு சொல்லிடுச்சி.

தாத்தா: ஆண்டவா..அஞ்சுரூபா இல்லாத அநாதைங்களை ஏன்டா படைச்ச?

நாரா: தாத்தா..தாத்..தா..

தாத்தா: உம்...?

நாரா: ஏன் தாத்தா, நான் நல்லா படிச்சி, பள்ளிக்கூட எட்மாஸ்டராயி, சேர்ர புள்ளங்களுக்கெல்லாம் ஆஸ்பத்திரிகாரங்க ஓசியிலேயே பர்த்சர்டிபிகேட் தர சொல்லட்டுமா தாத்தா?

தாத்தா: பேஷா சொல்லுடா ராசா!

(தந்தை வெளியிலிருந்து வருகிறார்)

தந்தை: கமலம்.. இந்தா இந்த சூரணத்த பசும்பால்ல, சாப்பிடணுமாம். பக்கத்து வீட்ல கால்படி பாலு கடனா வாங்கிக்க. காசு அப்புறம் தரலாம். எலேய்.. நாராயணா.. வாடா இப்படி. உனக்கு படிப்பு மேல அக்கரை ஜாஸ்தின்னு தெரியும்.. இன்னா பன்றது.. ஏழைங்களுக்குப் படிப்பு கெடையாது. கெடைச்சாலும் உதவாதுடா..பண்ணையாரு ஆட்டு பண்ணையைப் பார்த்துக்க ஆள் இல்லேனுன்னு சொன்னாரு. நான் ...உன்ன அனுப்புறதா சொல்லிட்டு வாரேன். மாசம் 60 ரூவா தாராராம்.. போயி கவனி!.

நாரா: அப்பா.. ரெவின்யூ ஆபீசர்...டாக்டர்..எட்மாஸ்டர்..

தந்தை: போடா கூறு கெட்ட பயலே...பொழைக்கறத பாரு!

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சின்னஞ்சிறு கதைப் போட்டி

முதல் பரிசு: ரு 100

இரண்டாம் பரிசு: ரு 25

தேர்ந்து வெளியிடப்படும் அனைத்துச் சிறுகதைகளுக்கும் இரண்டாம் பரிசு உண்டு.




விதிகள்: ☐ சிறுகதைகள் சுட்டியின் ஒரு பக்கத்திற்குள் அமைய வேண்டும் (சுமார் 180 சொற்கள்)

☐ கதைக் கரு சமூகப்பார்வையுடையதாக இருத்தல் அவசியம். ☐ இப்போட்டி சுட்டி வாசகர்களுக்கு மட்டுமே. எனவே பக்கத்தில் உள்ள வாசகர் வில்லையை வெட்டியிணைத்து அனுப்புதல் வேண்டும். ☐ ஒருவரே எத்தனை கதைகளையும் அனுப்பலாம்; ஒவ்வொரு கதையுடனும் வெட்டியிணைப்பு அவசியம். ☐ கிடைக்க வேண்டிய இறுதி நாள் : 28-2-89.

☐ ஏப்ரல் 89 இதழில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். ☐ உறைமேல் 'சின்னஞ்சிறுகதைப் போட்டி' எனக் குறிப்பிடுங்கள்.

**இரு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்புதுசுட்டி வாசகர் போட்டிகளை எதிர்பாருங்கள்! அடுத்த போட்டி அறிவிப்பு: மார்ச்சு '89 இதழில். புகைப்படப் போட்டி முடிவுகள் குறிப்பிட்டபடி பிப்ரவரி 89 இதழில் அறிவிக்கப்படும்.**

## சுட்டி சந்தா

12 இதழ்களை அஞ்சலில் பெற ரூ.10 பணவிடை (M.O.) செய்யுங்கள். ஒவ்வொரு இதழையும் தவறாமல் பெற சாந்தாதாரராவதே சரியான வழி. முகவரி: சுட்டி: AP-638, H பிளாக், அண்ணாநகர், சென்னை-600 040.


## சுட்டி இலவசம்

நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக்கூடிய புதியவர்கள் முகவரிகள் எவ்வளவு வேண்டுமாயினும் அனுப்புங்கள். உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

பதிவு எண்: TN/MS (N) 317




FREE E - BOOKS , www.thamizham.net.,